1994 ஏப்ரல் 13]

அவர்களுடைய வனச்சோலை திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சந்தன மரம் இயற்கையாக வளர்கின்ற பகுதிகளில் பழங்குடி மக்களை வைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது, அவர்களுடைய சமூகப் பொருளாதார வளர்ச்சியை செம்மைப் படுத்துவது போன்ற இப்படிப்பட்ட பணிகளுடைய அடிப்படையிலேதான் நாம் செய்து வருகிறோம். ஒருங்கிணைந்த பழங்குடி மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2,062 குடும்பங்களைச் சார்ந்த பழங்குடி மக்கள் ஆண்டுதோறும் சுமார் 2.8 இலட்சம் மனித வேலைநாட்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற அளவில் உருவாக்கப்பட்டு அவர்களுடைய பொருளாதார, கல்வி நிலையை மேம்படுத்துகின்ற எண்ணத்தில் நாம் செயல்பட்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 273, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்.

273—

குழந்தைகளுக்கான திரைப்படத்தை ஊக்குவிக்க அளிக்கப்படும் சலுகைகள்.

***15408** — டாக்டர் எஸ். சுந்தரராஜ்:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பார்—

குழந்தைகள் திரைப்படத்தை ஊக்குவிக்க மத்திய அரசு மற்றும் மாநில அரசு அளித்துள்ள சலுகைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசு குழந்தைகள் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி மற்றும் விளம்பர வரியிலிருந்து விலக்கு அளித்து வருகிறது. குழந்தைகள் திரைப்பட விழா நடத்தவும், உலகக் குழந்தைகள் திரைப்பட விழா நடத்தவும் தேவையான உதவிகளை அளித்து வருகிறது. குழந்தைகள் திரைப்படங்களைத் திரையிட அரசின் அரங்குகளைக் கொடுத்து

உதவுகிறது. மாவட்ட அளவில் குழந்தைகள் திரைப்படம் நடத்த அனைத்து உதவிகளையும் அளிக்கிறது.

மத்திய அரசும் தனது நிறுவனமான இந்திய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் திரைப்பட மையத்தின் மூலம், நல்ல படங்களைத் தயாரித்து, நாட்டின் பல பகுதிகளிலும் காட்ட நிதியுதவி உட்பட, வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறது. மத்திய அரசு இப்படிப்பட்ட படங்களுக்கு சுங்க வரி மற்றும் வருமான வரி விலக்கு அளிக்கிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறைக்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து உலக அரங்கோடு ஒப்பிடும் வகையில் நேரு ஸ்டேடியம் உருவாக்கியது போன்று குழந்தைகள் நல்வாழ்வுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டி வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்திய அளவில் நல்ல திரைப்படங்களை உருவாக்கும் வல்லுநர்களைக் கொண்ட தமிழகத்தில் குழந்தைகள் நலனுக்காக தமிழ்நாடு குழந்தைகள் நல திரைப்படப் பிரிவு சொஸைட்டி ஒன்றை நிறுவி அரசின் சார்பில் குழந்தைகள் திரைப்படம் எடுக்கவும் அந்தத் திரைப்படங்களை குழந்தைகள் பார்க்கும் அளவில் காட்சிகள் நேரம் மாற்றியமைக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிறுவனமான இந்திய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் திரைப்படக் கழகம் எடுக்கின்ற படங்கள்தான் காட்டப்பட்டு வருகின்றன. குழந்தைகள் திரைப்படங்கள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி மாணவர்களுக்கு மிகக் குறைந்த சலுகைக் கட்டணத்தில் ரூபாய் 1 அளவிலே குழந்தைகள் திரைப்படங்கள் காட்டப்பட்டு வருகின்றன. தமிழக அரசு வரிச் சலுகையும் அதற்கு அளித்து வருகிறது. அப்படிப்பட்ட படங்கள் எடுக்கப்பட வேண்டுமானால் நம்முடைய கல்வித் துறையும், சமூக நலத் துறையும் நிதி ஒதுக்கீடு செய்யுமேயானால் நிச்சயமாக தமிழ்நாடு திரைப்படப் பிரிவு அந்தப் பணியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் குழந்தைகள் திரைப்படங்கள் காட்டுகின்ற திரையரங்குகளில் காட்சி நேரங்களை மாற்றியமைப்பதற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் திரைப்படப் பிரிவை ஊக்குவிக்கவும், குழந்தைகளின்

1994 ஏப்ரல் 13]

உள்ளங்களில் நல்ல எண்ணங்கள் நல்ல கருத்துகள் உண்டாகும் வகையில் எடுக்கப்படும் படங்களை குறைந்த கட்டணத்தில் பள்ளியில் மாணவ மாணவிகளுக்குக் காண்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த கட்டணத்தில்தான் அப்படிப்பட்ட திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. வரி விலக்கு கூட கொடுக்கப்படுகிறது. குழந்தைகள் திரைப்படங்களுக்கு ஆண்டுக்கு 12 இலட்சம் ரூபாய் இந்த அரசு வரி விலக்கு அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளி மாணவர்களுக்கு அப்படிப்பட்ட படங்கள் காட்டப்பட வேண்டுமானால் கல்வித் துறையிலே அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுமேயானால் கருத்து விளக்கப் படங்கள், தமிழ்நாடு செய்திப் பிரிவின் மூலம் எடுக்கப்பட்டு மாவட்டங்களில் இருக்கின்ற வீடியோ வேன்கள் மூலம் காட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். பி. சேகர், கேள்வி குழந்தைகள் திரைப்படம் பற்றியது.

டாக்டர் எம். பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நலன் கருதி, சில்ட்ரன் ஃபில்ம் சொஸைட்டி ஆஃப் இந்தியா என்று மத்திய அரசு அமைத்தது போல சில்ட்ரன் பிலிம் சொஸைட்டி ஆஃப் தமிழ்நாடு என நமது மாநில அரசு ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 274, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

274—

விவசாய வங்கியில் மீனவர்களைச் சேர்க்க நடவடிக்கை.

19641— திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—